பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 07 வியாழக்கிழமை (21-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 192

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

**அர்ச்சனா ஜுவலர்ஸ்**

118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2052)

## பொ. ஐ. முன்னணி - முஸ்லிம் காங்கிரஸ் உறவு முறிந்தது

# அமைச்சர் பதவியிலிருந்து நேற்று ஹக்கீம் வெளியேற்றப்பட்டார்!

### ஜனாதிபதி அதிரடி நடவடிக்கை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்தலைவரும், உள்நாட்டு சர்வதேச வர்த்தக வாணிபகப்பல்துறை மற்றும் முஸ்லிம் சமயவிவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமைச்சர் பதவியிலிருந்து நேற்று விலக்கப்பட்டார்.

இதன் எதிரொலியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு அளித்து வந்தஆதரவை விலக்கிக்கொண்டதாக நேற்றையதினமே ரவூப்ஹக்கீம அறிவித்துள்ளார்.

## முஸ்லிம் காங்கிரஸ்எம்.பிக்கள் எதிர்க்கட்சி வரிசையில்

(பாராளுமன்ற நிருபர்)

அமைச்சர் ரவூப்ஹக்கீம் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து முஸ்லிம்காங்கிரஸ்எம்.பிக்கள் 7பேர் நேற்றுபாராளுமன்றத்தில் எதிரணிவரிசையில் அமர்ந்திருந்தனர்.

எதிரணிவரிசையில் அமர்ந்த இந்த ஏழு எம்.பிக்களையும் ஐக்கிய தேசியக்கட்சி எம். பிக்கள் கைகொடுத்து ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

ஏனைய 4 பாராளுமன்ற உறுப்பினர்களில் மொகாதீன் அப்துல்காதர் அரச தரப்பில் அமர்ந்திருந்தார்; பேரியல் அஷ்ரப் உட்பட ஏனைய மூவரும் நேற்று பாராளுமன்றத்திற்கு சமுகம் கொடுக்கவில்லை. (வ)

ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ்கட்சிக்கு இழுக்குத் தேடித்தரும்வகையில் பொது ஜனஐக்கியமுன்னணி அரசு நடந்துகொண்டதை அடுத்து கட்சியின் மத்திய குழுக் கூட்டத் தீர்மானத்தின் பிரகாரம் அரசில்இருந்து முஸ்லிம் காங்கிரசை வெளியேற்றியுள்ளதாக ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மத்திய குழு நேற்று முன்தினம் நள்ளிரவு வரை கூடி முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமை அமைச்சர் பதவியிலிருந்து வெளியேற்றுவதென தீர்மானித்தது.

(8ம் பக்கம் பார்க்க]

## அமைச்சர் பதவியிலிருந்து திருமதிஅஷ்ரப் ராஜினாமா

### அரசிற்கு தொடர்ந்தும் ஆதரவு?

(கொழும்பு)

அமைச்சர்ரவூப்ஹக்கீம் பதவியிலிருந்து விலக்கப்பட்டதையடுத்து அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் தனது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார்.

இராஜினாமாச்செய்வதற்கு முன்னதாக மறைந்த முன்னாள் அமைச்சர் அஷ்ரப்பின் சமாதிக்குச் சென்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை கட்சித் தலைமைக்கு ஏற்பட்ட அவமானமாகும். இதற்காக நான் அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்கிறேன் என உறுதி மொழி எடுத்துக்கொண்டது

(8-ம் பக்கம் பார்க்க)

## ஹிஸ்புல்லா ராஜினாமா

(கொழும்பு)

தேசிய வடிகால் அமைப்பு சபையின் தலைவராக இருந்த முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா நேற்று தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு கூட்டணியும் ஆதரவு!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மீது ஐக்கியதேசியக்கட்சி கொண்டுவரஉத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம்இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு தமிழர் விடுதலைக்கூட்டணி, ரெலோ அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிஉள்ளிட்ட 90 எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்து ஒப்பமிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி பொன். செல்வராசா கொழும்பில் இல்லாததால் அவரின் ஒப்பம் தொலைநகல் மூலம் பெறப்பட்டுள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஈ.பி.டி.பி ஆதரவு அளிக்கவில்லை. (வ)

## திருநெல்வேலியில் துப்பாக்கிச் சூடு சிப்பாய் காயம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்திப் பகுதியில் நேற்று மாலை 5.00 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தினால், இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி அரசுக்கு ஜே.வி.பி.ஆதரவு வழங்கும்?

### மத்திய குழு நாளை மறுதினம கூடும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி அரசு மீது கொண்டுள்ள நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா என்பது குறித்து மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) நாளைமறுதினம் கூடி ஆராயவுள்ளதாக கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் கூடும் கட்சிகளின் மத்திய குழு இது

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச்சட்டம் மேலும் 1 மணித்தியாலம் தளர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் மேலும் ஒரு மணித்தியாலத்தால் தளர்த்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இதுவரை இரவு 9மணிக்கு அமுலாகும் ஊரடங்குச் சட்டம் இனிமேல் இரவு 10மணிக்கு அமுலாகி அதிகாலை 5மணிவரை நடைமுறையிலிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்தகோரிக்கையை அடுத்தே ஊரடங்கு மேலும் ஒரு மணித்தியாலத்தால் தளர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

### ★ பிந்திய செய்தி ★

## ஜனாதிபதி-திருமதிஅஷ்ரப் நேற்று நள்ளிரவு சந்திப்பு

### ராஜினாமாவை ஏற்கவும் மறுப்பு

(கொழும்பு)

அரசுக்கான ஆதரவை முஸ்லிம் காங்கிரஸ் விலக்கிக் கொண்டதையடுத்து அமைச்சர் பதவியிலிருந்துஇராஜினாமாச் செய்துள்ளதிருமதி பேரியல் அஷ்ரப்பை ஜனாதிபதிசந்திரிகா நேற்று நள்ளிரவு அழைத்து ஒரு மணிநேரம் பேச்சு நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது அரசுக்கு ஆதரவு தருமாறு பேரியல் அஷ்ரப்பிடம் ஜனாதிபதி கோரியிருப்பதாகவும் அவரின் இராஜினாமாக் கடிதத்தை ஏற்க ஜனாதிபதி மறுத்துவிட்டதாகவும் நேற்று நள்ளிரவுக்குப் பின் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## கொட்டடிப் பகுதியில் ஒருவர் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் இனந்தெரியாதோரால் நேற்று மாலை 7.30 மணியளவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வதிவிடமாகவும் கொண்ட 5பிள்ளைகளின்தந்தையானஇரத்தினம் கணேசலிங்கம் என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்று மாலை கடைக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பும் வழியில் வில்லூன்றி பிள்ளையார் கோவிலுக்கண்மையில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இவரது சடலம் யாழ். போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம)

## பிரதம நீதியரசரை விசாரிக்க பாராளுமன்றுக்கு மேலாண்மை உண்டு

### சபாநாயகர் அனுரா தீர்ப்பு

[கொழும்பு]

பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிராக நாடாளு மன்றில் ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டு வரப்பட்ட குற்றவியல் பிரேரணையை, விசாரணைக்கு எடுத்துக் கொள்வதென சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா நேற்று அறிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவிசாரணைப் பிரேரணையை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாதென உயர்நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்த நிலையிலும் அத்தடை உத்தரவை நிராகரித்துபிரேரணையை விசாரணைக்குஎடுத்துக்கொள்வதென்ற முடிவை சபாநாயகர் அனுராநேற்று பாராளுமன்றில் வெளியிட்டார்.

பாராளுமன்றம் உயர் மேலாண்மை கொண்டதா அல்லது உயர்நீதிமன்றம்மேலாண்மை கொண்டதா என்றஅதிகாரப் பிரச்சினைக்கு அனுரா நேற்று வெளியிட்டமுடிவு

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கட்டடம் அமைப்பு

(ஊர்காவற்றுறை)

பனை அபிவிருத்திச் சபைக்கென அனலைதீவில் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இக்கட்டடப் பணிகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

(உ-75)

## ஒன்பது புலிகள் உயிரிழப்பாம்

(கொழும்பு)

கடந்த திங்கள் இடம்பெற்ற பல்வேறு மோதல் சம்பவங்களில் ஒன்பது புலிகள் கொல்லப்பட்டிருப்பதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவிலில் புலிகளின் பதுங்கு குழிஒன்றை தாக்கி அழித்ததாகவும் அதில் நான்கு புலிகள் கொல்லப்பட்டதாகவும், கிளாலியில் இடம்பெற்ற சண்டையில் இரண்டு புலிகளும் ஒரு இராணுவமும் கொல்லப்பட்டதாகவும் மணலாறு பகுதியில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் மூன்றுபுலிகள் கொல்லப்பட்டதாகவும அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ந-8]

## மனைப் பொருளியல் கண்காட்சி

(புலோலி)

தூரிகை நுண்கலை வளாக நிறுவன மனைப் பொருளியல் கண்காட்சி 23, 24 ஆம் திகதிகளில் நெல்லியடிமத்திய மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள நிறுவன மண்டபத்தில நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சிஇறுதியில்யின் சான்றிதழ் வழங்கும் விழாவும் நடைபெறுமென இயக்குநர் இ. ரகுவரன் தெரிவித்துள்ளார்.

(உ-52)

## அவசரப் பொதுக்கூட்டம்

(புலோலி)

உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தில் பதிவு செய்தஉழவுஇயந்திர உரிமையாளர்களுக்கான அவசர பொதுக்கூட்டமொன்று இன்று மு.ப. 10 மணிக்கு பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி பொதுசன நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல உழவு இயந்திர உரிமையாளர்களையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொளளுமாறு உழவு இயந்திர உரிமையாளர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

(உ-52)

# மாகாண மட்ட விளையாட்டு போட்டிகளில் பங்குகொள்ளும் மாணவர்விரைவில்திருமலைபயணம்

(யாழ்ப்பாணம்)

வடக்குக்- கிழக்குமாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான பெரும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து 110 மாணவர்கள் 28 ஆம் திகதி திருமலை செல்லவுள்ளனர்.

இவர்கள் அங்கு நடைபெறவுள்ள உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், ஆகிய போட்டிகளில்வடக்குக-கிழக்கிலுள்ள ஏனையமாவட்டங்களிலிருந்தும் வருகை தரும் பாடசாலை விளையாட்டு வீரர்களுடன் மோதவுள்ளனர்.

யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையினை மேலும் விருத்தி செய்யும் நோக்கில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுத்த பணிப்பினையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து திருமலை புறப்படும் இப்பாடசாலை விளையாட்டு வீரர்களுக்கான போக்குவரத்து, உணவு மற்றும்தங்குமிட செலவீனங்கள் யாவற்றையும்வடக்கின்புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை பொறுப்பேற்றுள்ளது.

இவ் விளையாட்டு வீரர்கள் கடந்த 14 ஆம் திகதி திருமலை புறப்பட ஏற்பாடாகி இருந்த வேளை கப்பல் பிரயாணத்தில் எற்பட்ட தடங்கல் காரணமாக பயணம் தடைப்பட்டிருந்தது தெரிந்ததே

(உ-10)

# நிதி துஷ்பிரயோகம்

(இணுவில்)

கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு சுய தொழில்வாய்ப்பு மற்றும் உதவிகள் பொருட்டு யு. என். டி. பி. அமைப்பினால் வழங்கப்படும் நிதியினையோ, அவற்றினால் கிடைக்கும் வட்டிப்பணத்தினையோ வேறுதேவைகளுக்குப் பயன்படுத்தக்கூடாது.

இவ்வாறு கண்டிப்பான உத்தரவை அண்மையில் இணுவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க விசேட பொதுக்கூட்டத்தின் போது வலி தெற்கு பதில் பிரதேச செயலர் கேதீஸ்வரன் விடுத்துள்ளார்.

கிராம அபிவிருத்திச் சங்கதிகள் சில சமூக அபிவிருத்திக்கு வழங்கப்படும் பணத்தினை தேவையற்ற விதத்தில் பயன்படுத்தியதாக பொதுமக்கள் கொடுத்த முறைப்பாட்டையடுத்தே இவ் அறிவித்தல் விடுவிக்கப்பட்டுள்ளது.

(உ-49)

## கும்ப அபிஷேகம்

வடமராட்சி துன்னாலை மேற்கு மருதடி மிந்தில் ஞானவைரவர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளை நடைபெறவுள்ளது.

(உ-52)

# வடமராட்சியில் அதி வேகமாக காய்ச்சல் நோய் பரவுகிறது

(மந்திகை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் காய்ச்சல் நோய்க்குச்சிகிச்சை பெறச் செல்வோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடும் காற்று மற்றும் அதிகரித்த வெப்பம் காரணமாக வடமராட்சிப் பகுதியில் காய்ச்சல் நோய் அதி வேகமாகப் பரவி வருகிறது என்றும் கூறப்படுகிறது.

(உ-23)

# பனையால் வீழ்ந்த சீவல்தொழிலாளிபடுகாயம்

(மந்திகை)

பனையில் ஏறிய சீவல் தொழிலாளி ஒருவர் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டிப் பகுதியில் நடைபெற்ற இச் சம்பவத்தில் தென்மராட்சியிலிருந்துஇடம் பெயர்ந்து நெல்லியடி அரசடிச் சந்திக்கு அண்மையில் வசித்து வந்த சின்னத்துரை ரமேஸ்(வயது 23) என்பவரே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-23)

# சாரதிநேர்முகத் தேர்வு இன்றும், நாளையும்

(மந்திகை)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையில் உள்ள சாரதி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகத் தேர்வு நேற்று முதல் நடைபெற்று வருகிறது.

நேர்முகத் தேர்வுக்குத் தோற்றுவோர் பிறப்புச் சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ், பாடசாலை விடுகைப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றுடன் சமுகமளிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி நேர்முகத் தேர்வுக்கு நூற்றுக் கணக்கானோர் அழைக்கப்பட்டிருப்பதாகவும் அறிய முடிகிறது.

(உ-23)

# அயலாருடன் கைகலப்பு மயக்கமடைந்த நிலையில் இளம்பெண் ஆஸ்பத்திரியில் அனுமதி

(மந்திகை)

அயல் வீட்டாருடன் ஏற்பட்ட வாய்த்தகராறு கைகலப்பாக மாறியதில் மயக்கமடைந்த நிலையில் பெண் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை துன்னாலை தல்லையப்புலத்தில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த செல்வநாயகம் கோமதி [வயது 18] என்பவரே மயக்கமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-23)

# புலிகள்மீதான தடை நீக்கம் ஜே. வி. பி. எதிர்க்கும்

(கொழும்பு)

புலிகள் மீதான தடை நீக்கப்படுவதை ஜே வி. பி எதிர்க்கும் என்று அந்தக்கட்சி அறிவித்துள்ளது.

தேசிய பிரச்சினையின் மூலகாரணங்களைக் கண்டுபிடிக்க அரசு தவறிவிட்டது. சமத்துவம், ஜனநாயகம் ஆகியவற்றின் அடிப்படையில் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

எமது நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் வெளிநாட்டு சக்திகளின் மத்தியஸ்தத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று தெரிவித்துள்ள ஜே. வி. பி புலிகள் மீதான தடை நீக்கப்படுவதையோ கிழக்கில் தனியான முஸ்லிம் மாவட்டம் அமைக்கப்படுவதையோ ஏற்க முடியாதெனவும் அறிவித்துள்ளது.

(உ-8)

# சமூக விழிப்புணர்வு பணிகளில் அபிவிருத்தி தொண்டர் ஈடுபாடு

பருத்தித்துறைப் பிரதேச செயலக அபிவிருத்தித் தொண்டர்களால் வடமராட்சிப் பகுதியில் சமூக விழிப்புணர்வை எற்படுத்தும் வகையிலான தெருக்கூத்து நேற்று பரவலாக நடாத்தப்பட்டது.

மந்திகை சந்திக்கு அருகிலும் மற்றும் பருத்தித்துறை ஈ. பி டி. பி அலுவலகத்திற்கு முன்பாகவும் மக்கள்கூடும் பிரதான இடங்களிலும் இத் தெருக்கூத்து நடைபெற்றது.

பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் அபிவிருத்தி தொண்டர்கள் ஊடாக இத் தெருக்கூத்தை ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-43)

## உள்ளக விளையாட்டு

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலா சாலையின் முதலாம் வருட ஆசிரிய மாணவர்களின் உள்ளக விளையாட்டுப் போட்டி இன்று நடை பெறவுள்ளது.

(உ-49)


## அருந்திவிட்டீர்களா! பனையின் போசாக்கு மிக்க இயற்கைப்பானம்(பதநீர், கருப்பநீர்)

எமது சகல கற்பக விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றது. குளிரூட்டப்பட்ட 190 மி. லீ போத்தல் ஒன்றின் விலை ரூபா 5/- மட்டுமே. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடங்கள்.

கற்பகம்

இல: 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

இல: 499, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

இல: 5, சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி.

கற்பகம்
பருத்திக்துறை வீதி, மாலு சந்தி.

கற்பகம்
இல: 30. நவீன சந்தை, சுன்னாகம்.

பனை அபிவிருத்திச் சபை,
தலைமைச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

[C/2124]


# சந்தேக நபர் நாட்டில் இல்லை

[கொழும்பு]

தெஹிவளை ரயில்நிலைய குண்டுவெடிப்புடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நாட்டைவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இதுதொடர்பான வழக்கு விசாரணைநேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொளளப்பட்ட போது பொலிஸார் மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளனர்.

குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஏழுபேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது அவர்கள் மீது ஆயிரத்து 70 குற்றச்சாட்டுக்கள சுமத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கெதிராக நாநூற்று முப்பத்தெட்டு சாட்சியங்களும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-8)

## வலி, கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் சட்டவிரோத வியாபாரங்களை நிறுத்துதல்

தென்மராட்சியில் இருந்து அனுமதி பெறாமலும், திருட்டுத் தனமாகவும் வலிகாமம் பகுதிக்கு கொண்டு வரப்படும் பொருட்களை வலி. கிழக்கு பிரதேச சபை எல்லைக்குள் வைத்து அனுமதி பெறாமலும், போக்குவரத்திற்கு இடையூறாகவும் விற்பனை செய்வதாக முறைப்பாடு கிடைத்துள்ளது. எனவே உடனடியாக இவ்வியாபாரத்தை நிறுத்துமாறும், தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

பூ. குணசிங்கம் ஜே. பி. யு. எம்
தவிசாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
19-06-2001

[C/2128]

# அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் நவற்கிரி கிராம மக்கள் அல்லல்

## தொண்டு நிறுவனங்கள் பாராமுகம்

(ஈச்சமோட்டை)

யாழ் நிலாவரையை அண்டிய நவற்கிரி வடக்கு வெளி சரஸ்வதி சனசமூக நிலையப் பகுதி மக்கள், அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் பெரும் துன்பங்கள் மத்தியில் சீவியம் நடத்துகின்றனர்.

இது தொடர்பாக பொது அமைப்புக்களும், தொண்டு நிறுவனங்களும் பாராமுகமாக இருப்பது குறித்தும் பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப் பகுதி மக்கள், போக்குவரத்துப் பாதை சீரின்மை, மலசல கூட வசதிகள் இன்மை, ஆரம்பப் பாடசாலை இன்மை போன்ற பெரும் குறைபாடுகளை எதிர் நோக்கி வருகின்றனர்.

பெண்களும் குழந்தைகளும் கூட மலசலம் கழிப்பதற்கு ஒன்றரை மைல் தூரம் செல்ல வேண்டியுள்ளதாகவும்,

இப் பகுதியில் பொது அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் தமது அடிப்படை வசதிகளான மலசல கூட, ஆரம்பக் கல்வி வசதிகளையாவது செய்து தரமாட்டார்களா எனவும் அம்மக்கள் எதிர்பார்ப்பு வெளியிட்டு வருகின்றனர். (உ-59)

## செய்தித் துளிகள்

### இன்று கொடியேற்றம்

(இணுவில்)

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 3, 4, 5 ஆம் திகதிகளில் முறையே சப்பறம், தேர், தீர்த்த உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. (உ-49)

### பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக முல்லைத் தீவு மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இம்மாதம் 25 ஆம் திகதி வர்த்தகத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து முல்லை மாவட்ட மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். (உ-10)

### ஆக்கத்திறன் கண்காட்சி

(புலோலி)

வடமராட்சிக் கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் புதுயுக புத்தாக்க. வழிகாட்டல் மாணவர் ஆக்கக்கண்காட்சி 22, 23 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை மட்டங்களில் நடைபெற்ற கண்காட்சிகளில் தெரிவுசெய்யப்பட்ட கண்காட்சிச் சாதனங்கள் இதில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-52)

### கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நேற்றைய தினம் மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி நடைபெற்றது.

மேற்படி கண்காட்சியில் சிறந்தனவாகத் தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் வெள்ளி, சனி ஆகிய தினங்களில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (உ-15)

### திருமலை பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 18 பேர் அடங்கிய கிரிக்கெட் அணியினர் திருகோணமலை பயணமாகி உள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் விளையாடித் தெரிவான இவ்விளையாட்டு வீரர்கள் தென்னிலங்கையில் நடைபெறும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியிலும் கலந்துகொள்கின்றனர்.

இவ் விளையாட்டு வீரர்களுக்குரிய போக்குவரத்து செலவினங்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றுள்ளார் என ஈ.பி.டி.பி யின் யாழ். மாவட்ட உதவி அமைப்பாளர் நிசாந்தன் தெரிவித்தார். (உ)

### மாதாந்த கூட்டம்

(தென்மராட்சி)

வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் மாதாந்தக்கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநெல்வேலியிலுள்ள பத்திரிகையாளர் எஸ். என். இராமச்சந்திரன் இல்லத்தில் நடைபெறவுள்ளது. (உ-77)

### மரத்தால் வீழ்ந்து மாணவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆலமரத்தில் ஏறிக் குழை வெட்டிய சமயம் கைதவறி மரத்திலிருந்து கீழே வீழ்ந்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காரை நகர்ப் பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா பவானந்தராசா (வயது 16) என்ற மாணவனே படுகாயமடைந்தவனாவான். (உ-10)

### இன்று திறந்துவைப்பு

(புலோலி)

பிரித்தானிய அரசின் நிதி உதவியுடன் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட கப்புதூ குடிநீர் விநியோகத் திட்டம் இன்று பிரித்தானியத் தூதுவர் லிண்டா டபீல்ட்டினால் சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்படவுள்ளது. (உ-52)

### பெருவிழா

[ஈச்சமோட்டை]

புனித யுவானியாரின் பிறப்புத் தினத்தை நினைவு கூரும் முகமாக கத்தோலிக்க மக்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி திருவிழாவைக் கொண்டாடுகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யுவானியார் ஆலயத்திலும் நெடுந்தீவிலுள்ள யுவானியார் ஆலயத்திலும் அன்றைய தினம் பெருவிழாத் திருப்பலிகள் இடம் பெறவுள்ளன.

அத்துடன், அதற்கு முன் தினமாக சனிக்கிழமை சிறுவர் சிறுமியர்களுக்கானமுதன் நன்மை வழங்கும் விசேட நிகழ்வும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-59]

### அன்னதானத்தில் பங்கேற்க அழைப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி அம்மன் அடியார்களுக்கு வழமை போல் இரவும் பகலும் அன்னதானம் வழங்கப்படும் எனவும்,

பக்தர்களைத் தவறாது அன்னதானத்தில் கலந்து கொள்ளுமாறும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினர் அறிவித்துள்ளனர். (உ)

## இராசி பலன்

21-06-2001
(ஆனி 7, வியாழன்)
அமாவாசை மாலை 6.14 வரை
மிருகசிரிடம் மாலை 7.01 வரை
ராகுகாலம் 1.24- 2.54
நல்லநேரம் 7.24- 8.54
அமாவாசை விரதம்.

**மேடம்**
நினைத்தகாரியம்கைகூடும், இனிய சம்பவம், வாக்கு மேன்மை, அந்நியர் சந்திப்பு.

**இடபம்**
பொருள் விரயம், வாக்குக் கலகம், திடீர் நன்மை, காரிய தாமதம்.

**மிதுனம்**
பெரியோர் ஆசி, புதிய பொருள் சேர்க்கை, முயற்சி தாமதம், வீண் கற்பனை.

**கடகம்**
பிரயாணம், மனக்கிலேசம், சுபசெலவு, நித்திரைக் குழப்பம்.

**சிங்கம்**
காரியம்கைகூடும், பொருள் வரவு, புகழ், சகோதரர் உதவி.

**கன்னி**
தொழில் முன்னேற்றம், சுபசெய்தி, நல்ல நிகழ்வு, கீழ்ப்படிவு.

**துலாம்**
வயிற்றுக் கோளாறு, மனப் பதட்டம், பிரயாணம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
உறவினர் மனஸ்தாபம், காரிய தடங்கல், வியாதி, போசன சுகம்.

**தனுசு**
விருந்துபசாரம், நல்லகாரியம், வாகன வசதி, திடீர் சந்திப்பு.

**மகரம்**
சந்தோசமான சம்பவம், நோய்குணமடைதல், முயற்சி விருத்தி, திடீர் பயணம்.

**கும்பம்**
அதிகாரம், தாழ்வு நிலை, தொழில் சிறப்பு, முயற்சி தாமதம்.

**மீனம்**
ரோகம், உறவினர் மனஸ்தாபம், மனச்சஞ்சலம், காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

---

மணிபல்லவத்தில் மகோற்சவம்

**1 ஆம் நாள்**

(இன்று கொடியேற்றம்)

## 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### அபயம் அளித்திடுவாய்

தீவகத்தின் தாயம்மை நாகம்மாளே;
திக்கெல்லாம் உன்னருளைத் தேடிநின்றோம்
போவதற்கும் வருவதற்கும் புகலாய்வந்து,
புனித உந்தன் தலம் வணங்கும் பொசிப்பைத் தாராய்
ஆவலுற்றோம் ஆரணியே அம்மா தாயே!
அபயம் எமக்(கு) அளித்திட்டு; அருளாற்துன்பம்
மேவுதற்கு, மீனாட்சி உந்தன் ஆட்சி
மேன்மையுற கொடியேற்றி மீட்டுத்தா, வா!

நயினைச்சோதி

### நாகம்மா காத்தருளே!

நாற் புறமும் கடல் சூழ- நடுவிருக்கும் தீவினிலே
வீற்றிருக்கும் நாயகியே! வேறு வழி நாம் காணோம்
நேற்று வரையுன் புகழை நினைந்து மகிழ்ந்திருந்தோம்
ஆற்றுமடை திறந்தது போல் அருளெமக்குத் தாருமம்மா!

கயிலை மலை கோயில் கொண்ட கணவருடன் நீ உவந்து
பயில் நடனம் பார்க்க வென்று பணிவுடனே இங்கு வந்தோம்
துயில தனையும் நீத்துத் துதித்து மகிழ்கின்றோம்
நயினையிலே கோயில் கொண்ட நாகம்மா காத்தருளே:

அடியார்கள் எல்லாம் அலைகடல் போலிங்கு வந்து
கொடியேற்றம் காண்பதற்காய் குழுமியிருக்கின்றார்
மிடி போக்கி அன்பர்களை மேன்மையுறச் செய்வாய்
நெடுமாலின் தங்கையே நின்பாதம் போற்றியம்மா;

மதிவாணர்

### நல்லகரம் காட்டிடுவாய்!

நர்த்தனங்கள் புரிந்து வரும் நயினை அம்மா
நாமெல்லாம் நயினை வர
நல் வரம் அருள வேண்டும்
நாலு ஊரும் சேர்ந்து உந்தன்
நல்லதோர் உற்சவம்காண
நாடி வருவோமே!
நயந்து உந்தன்
நல்ல கரம் காட்டிடுவாயே!

காரவையூரான்

### அன்னைக்கு ஓர் சமர்ப்பணம்

சங்கரி சாம்பவி சாமுண்டி ஆதிவிமலலோஜினி
ஈரேழு லோகமும் ஈன்றாளும் நாயகியே நயினையம்மா!

பட்டரவர் தொழுதேத்தும் பரம சிவன் பத்தினியே!
பார் மக்கள் பணிந்தேத்தும் நாகேஸ்வரியே!
ஆதிமூலமே அமரரேத்த அரக்கர் களும் அடிபணியும்
ஆதி சக்தி மூகாம்பிகைத்தாயே! அடியேனை ஆட்கொள்ள வருவாயம்மா!
இன்றுன் கொடியேறும் வேளைதாயே அருள் வாயம்மா!

நயினை ப. குணேந்திரன்

### அருள் புரிவாய் அம்மா

நயினையெம் பதிமேவு நாக பூஷணியே
நலங்கள் பல புரிந்திடும் நாயகியே
தாயினும் இனிய தயாள ஈஸ்வரியே
தயவுடன் எம்மைக் காத்தருள்வாய் அம்மா!

பக்தர் குறை தீர்க்கும் பரமேஸ்வரியே
பாரினில் எம் இடங்களையும் பார்வதி தேவியே
ஆழி சூழ் ஊரினிலே அரனென அமர்ந்திருப்பவளே
அனைவரையும் ஆண்டு அருள் புரிவாயம்மா

நீர்வையூர் வெ. சுதர்சினி

---

### வெள்ளி நற்சிந்தனை

[யாழ்ப்பாணம்]

வடமராட்சி இந்து மாமன்றத்தால் வெள்ளி தோறும் பாடசாலைகளில் நடத்தப்படும் சமய சமுதாய நற்சிந்தனைத் தொடரின் நாளைய நிகழ்வு யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இரா. கேதீஸ்வரன், 'கம்பன் சொன்ன அறம்'' எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார். [உ-104]

### நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரியில் விஞ்ஞான தினமும் 'சங்கோதம்' நூல் வெளியீடும் இன்று காலை 9மணிக்கு மேற்படிபாடசாலையின்கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது. (உ-6)

## சந்திகளில் கூடி நின்று சண்டித்தனம் புரிபவர்கள் மீது

# பொலிஸார் தீவிர கண்காணிப்பு

### கைதுகளும் பரவலாக இடம்பெறுகின்றன

[ஈச்சமோட்டை]

மாலை நேரங்களில் யாழ்ப்பாணத்தில் சந்திகளில் கூடும் இளைஞர்களை பொலிஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணப் பகுதியில் பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்கள் கோஷ்டி மோதல்களில் ஈடுபட்டு பெரும் சலசலப்பை ஏற்படுத்தி வருவது தெரிந்ததே.

இவ்வாறான அடாவடித்தனங்கள் குறித்து பொலிஸாருக்கு பொது மக்கள் வழங்கிய முறைப்பாடுகளை அடுத்து பொலிஸார் இந்நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

நேற்றும் பல இடங்களில் பொலிஸார் பெருந்தொகையில் இவ்வாறான இளைஞர்களை சந்திகளிலிருந்து கைது செய்து தமது வாகனத்தில் ஏற்றிச்சென்றமையைக் காண முடிந்தது.

இதனையடுத்து அனேக இளைஞர்கள் தமது சந்திச் சேட்டைகளைக் கைவிட்டு வீடுகளில் முடங்குவதாகத் தெரியவந்துள்ளது.

இவ்வாறான பொலிஸாரின் நடவடிக்கைகளை பலரும் வரவேற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-59)

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல - 21

### அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

(நேற்றைய தொடர்ச்சி)

50) மோ. மதன், வல்வை. ம. ம. வித்தியாலயம்
51) வே. விஜிககுமார், வல்வை. ம. ம. வித்தியாலயம்
52) வி. மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
53) து. தர்ஷிகா, ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை
54) ந. துசிகேசன், யாழ். மத்திய கல்லூரி
55 சி. திபர்சன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
56) ஸ்ரீ. சுகர்சிகா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
57) மோ. ஜீர்த்தன், யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி
58) செ. பயூரா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம
59) பா. கிருஷ்ணபவான், கலட்டி மெ. மி. த. க. பாடசாலை
60) ஞா. ரகுவர்மன், வல்வை. ம. ம. வித்தியாலயம்
61) ச. கிருஸ்ணவேணன், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்
62) ஆ. திவ்வியா, கோப்பாய் நாவலர் பாடசாலை
63) தே. மாநதி, தேவரையாளி இந்துக் கல்லூரி
64) அ. விஸ்ணுஜா, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
65) பா. நிருபா, சாவ. மகளிர் கல்லூரி
66) இ. வினிபிறட்ஸ்ரீபன், யாழ். சமபத்திரிசியார் கல்லூரி
67) சி. சஜாகரன், கொக்குவில் சி. சி. த. க. பாடசாலை
68) ம. யூலின் இமமானுவேல், யாழ். மத்திய கல்லூரி
69) சி. நிருபா, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி
70) அ. கம்டாறஜன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
71) ம. அனோஜினி, தாவடி இ. த. க. பாடசாலை
72) ப. ஜெபந்திரா, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
73) த. ஏகவரதன், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
74) சு. கோகுலன் புற்றளை மகா வித்தியாலயம்
75) ச. நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
76) உ. விஜீத, யாழ். மத்திய கல்லூரி
77) த. தகசன், கலட்டி மெ. மி. த. க. பாடசாலை
78) கு. ஜெசாமினி, தாவடி இ. த. க. பாடசாலை
79) பு. தபோகரன், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
80) வ. ஜயந்தன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
81) ப. அபிலாஜினி, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை
82) வ. தயாதீசன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
83) த. டயானி, மானிபபாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
84) சு. துவாரகன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
85) சி. பகீரதி, வட்டு. யாழ்பபாணக் கல்லூரி
86) த. தர்மராஜ், பளை மத்திய கல்லூரி
87) அ. ரம்யா, வல்வை ம. ம. வித்தியாலயம்
88) தி. அஜந்தா, மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்
89) பு. டோபிகா, கலட்டி மெ. மி. த. க. பாடசாலை
90) பொ. நிரோசா, கரணவாய் மகா வித்தியாலயம்
91) ப. சஜிந்தன், கொடிகாமம் திருநாவுககரசு மகா வித்தியாலயம
92) அ. விவேக், வல்வை சிவகுரு வித்தியாசாலை
93) ஜெ. ஜெனித்தா, தேவரையாளி இந்துக் கல்லூரி
94) பி. மகிநதன், நெ. மி. மி. த. க. பாடசாலை
95) லூ. எவ்றேம் சுவிஸ்ரன், மாதகல் சென் தோமஸ்
96) இ. நிராகுலன், கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை
97) ச. கிரிசாந்தி, யாழ் சன்மார்கக மகா வித்தியாலயம்
98) அ. வசிகரன், அலவாய் றோ. க. த. க. பாடசாலை
99) பி. சங்கீதா, கலட்டி மெ. மி. த. க. பாடசாலை
100) க. சோபனா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
101) அ. அன்ரன்தனேஸ், மாதகல சென்தோமஸ்
102) கு. மேரி ஜசிந்தா, யாழ் திருக்குடும்ப கன்னியர்மடம்
103) ஜெ. ஜேபசனா, கலட்டி மெ மி. த. க. பாடசாலை
104) த. சோபிதா, மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்
105) அ. ஜெீரன், யாழ். பரியோவான் கல்லூரி
106) தி. கிருபன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
107) வி. நிருயன், வல்வை, சிவகுரு விதநியாசாலை
108) ச. மேரி அமலா, மாதகல் சென்தோமஸ்
109) அ. கவாஸ்கர், யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி
110) நி. பிரசாந். அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்
111) க. நிரோஜினி, யாழ். புனிதமரியாள் வித்தியாலயம்
112) சி. கேதினி, கம்பர்மலை அ. த. க. பாடசாலை
113) ம. மேரிறொபிக்கா, யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்
114) சி. ஜெயதாரகா, கம்பர் மலை அ. த. க. பாடசாலை
115) யோ. மருதிகா, அல்லாரை அ. த. க. பாடசாலை
116) தெ. கஜதீபன், புற்றளை மகா வித்தியாலயம்
117) இ. மரியயாழினி, வல்வை. ம. ம. வித்தியாலயம்
118) றெ. மைத்திரி, யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
119) ம. விஜி, சித்தன்கேணி அ. மி. த. க. பாடசாலை
120) யோ. செபஸ்ரியன், அளவெட்டி றோ. க. த. க. பாடசாலை
121) க. சரவணபவன், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

## அரசு மீது மேயர் சாடல்

(கொழும்பு)

''அதிகாரப்பரவலாக்கலை அறிமுகப்படுத்தினால் கூட அதனை மீண்டும் பறித்தெடுக்க இந்த அரசாங்கம் முற்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை'' இவ்வாறு கருத்து தெரிவித்திருக்கிறார் யாழ். மேயர் ரவிராஜ்.

கொழும்பு தனியார் வானொலி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில்,

கொழும்பு மாநகர சபையின் சில அதிகாரங்களை மத்திய அரசின் கீழுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை பொறுப்பேற்றிருப்பது இனப்பிரச்சினை தொடர்பான அதிகாரப் பரவலாக்கல் விடயத்திலும் அரசு இதே கொள்கையைக் கடைப்பிடிக்குமா? என்று தனக்கு சந்தேகத்தை தோற்றுவித்துள்ளதாக அவர் கூறியிருக்கிறார். (உ-8)

## வைத்திய நிலையம் திறப்பு

[யாழ்ப்பாணம்]

வட பிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் சாலையில் தொழிலாளர் நலன் கருதி வைத்திய நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்திய நிலையத்தை சம்பிரதாய முறைப்படி டாக்டர் சங்கர் திறந்துவைத்தார். (உ)

## பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக சூழல் தினத்தினை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக புவியியற்கழக மாணவர்களால் நடத்தப்படும் மாணவர் மட்ட பொதுஅறிவுப் போட்டி, சுவரொட்டிப் போட்டி என்பன நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற் துறைமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் 60 நிமிடங்களை கொண்டதாக அமையும் என யாழ். பல்கலைக்கழக புவியியற்கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (உ-6)

## தபாற் கந்தோர் பழைய இடத்தில்

(கல்வயல்)

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்ததை யடுத்து கொடிகாமம் தபாற் கந்தோர்பருத்தித்துறை வீதியில் முன்னர் இயங்கிய அதே கட்டடத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இயங்கவுள்ளது. (உ-111)

## சுண்டுக்குளிப் பகுதியில் சுற்றி வளைப்பு

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளியின் குருசோ வீதி, பழைய பூங்கா வீதி, கடற்கரை வீதி. பற்றிக்ஸ் வீதி ஆகிய பகுதிகள் நேற்று அதிகாலை 6 மணி தொடக்கம் 9.30 மணிவரை படையினரால் சுற்றிவளைப்புக்குள்ளாக்கப்பட்டன.

இதனையடுத்து இப்பகுதிகளைச் சேர்ந்த 18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட வயதினையுடைய ஆண்கள், பெண்கள் அனைவரும் சென் றோக் விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணைகளுக்குள்ளாக்கப்பட்டனர்.

இவ் விசாரணைகளின் போது இளைஞர்கள் நால்வர் கைது செய்யப்பட்டபோதிலும் சிலமணிநேர இடைவெளியின் பின் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, இச் சுற்றிவளைப்பினால் மாணவர்கள், அரச உத்தியோகத்தர் எவருக்கும் இடையூறு ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-110-59)

### கட்டைவேலி ப.நோ.கூ.ச

## குறைந்த கட்டணத்துடன் முச்சக்கர வண்டிச் சேவை

(மந்திகை)

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் ஓட்டோ சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

குறைந்த கட்டணத்துடன் ஓட்டோசேவையை சங்கத்தினூடாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கம் அண்மைகாலமாக சங்கத்தின் செயற்பாடுகளை பல்வேறு செயற்திட்டங்கள் மூலம் விஸ்தரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-23)

## பிரசவ கால விடுமுறை ஆண்களுக்கு 5 தினங்கள்

(கொழும்பு)

பெண்களைப் போல ஆண்களுக்கும் பிரசவகால விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் மகளிர் விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்தார்.

பெண்களுக்கு 5 மாத கால பிரசவ விடுமுறை வழங்கப்படுவதைப் போல அவர்களுக்கு உதவியாக கணவன்மாருக்கும் விடுமுறை தேவை என்ற வேண்டுகோளுக்கு இணங்க இம்முடிவு நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன் பிரகாரம் பிரசவ திகதி உட்பட 5 நாட்கள் ஆண்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளதாகவும், 2002 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் என அமைச்சர் சுமேத ஜயசேன மேலும் தெரிவித்துள்ளார். (உ-7)

### குற்றச் செயல்களைத் தடுக்கவே

## இலக்கத் தகடு பரிசீலனை பொலிஸ் அதிகாரி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதியில் பயணம் செய்யும் மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகள், மற்றும் உரிமைப் புத்தகங்களையே பொலிஸார் பிரதானமாகப் பரிசோதித்து வருவதாக யாழ். நகரப் பகுதிக்கான போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி எஸ்.ஐ. உடுவல்ல தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். குடாநாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை அடுத்து, மோட்டார் சைக்கிள்களை இனம் காண்பதற்காகவே இலக்கத்தகடுகளை தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும்,

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாதவர்களுக்கு அவற்றை விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தம்மால் முடிந்த உதவிகளைச் செய்யத் தாம்தயார் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, குடாநாட்டின் ஏனைய பொலிஸ் பிரிவுகளில் சாரதி அனுமதிப்பத்திரம் பொலிஸாரினால் வாகன சாரதிகளிடம் கேட்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-15)

## விபத்தில் அகப்பட்ட கற்பூர வியாபாரியின் கால் முறிந்தது

(மந்திகை)

நெல்லியடி நகர்ப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்- சைக்கிள் விபத்தில் அகப்பட்ட முதியவர் ஒருவர் கால் முறிந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் கற்பூர வியாபாரியான நெல்லியடியைச் சேர்ந்த மாணிக்கம் முருகன் (வயது- 89) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (உ-23)

### பெண்களுக்கு தொல்லை கொடுத்தார்களாம்

## இளைஞர்கள் சிலருக்கு பொலிஸார் எச்சரிக்கை

(சுண்டுக்குளி)

திருமறைக்கலா மன்றம், புனித வளன் கத்தோலிக்க அச்சகம் ஆகிய இடங்களிற்கு அருகே நேற்று முன்தினம் மாலை 11 பேரை பொலிஸார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தி எச்சரிக்கை செய்யப்பட்ட பின் விடுவித்துள்ளனர்.

மேற்படி 11 இளைஞர்களும் பெண் பிள்ளைகளுக்கு பெருந்தொல்லை கொடுத்து வந்தார்கள் என்ற பெற்றோரின் முறைப்பாட்டையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாக அறிய முடிகிறது. (உ-111)

## இன்று ஒரு தகவல்

# துன்பமும் இன்பமாகும்

ஒரு சிறு அறையில் பத்துப் பேர் தங்கியிருந்தனர். பத்துப் பேரும் ஒரேஇடத்தில்இருந்து கொண்டு எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருப்பது எல்லோருக்குமே துன்பமாக இருந்தது. யாரும் வேறு இடத்திற்குச் செல்லவும் விரும்பவில்லை. அந்த ஊருக்குத் துறவி ஒருவர் வந்தார். பத்துப் பேரும் அவரைச் சந்தித்து 'துறவியாரே! நாங்கள் எல்லோரும் ஒரு சிறு அறையில் தங்கி மிகவும் துன்பப்படுகிறோம். இதிலிருந்து விடுதலை பெற நல்ல வழி ஒன்று சொல்லுங்கள்' என்று கேட்டார்கள்.

'அப்படியா?' என்ற துறவி 'ஒருவாரம் மட்டும் அந்த அறைக்குள் உங்களோடு ஒரு செம்மறி ஆட்டையும் தங்க வையுங்கள். அதன் பிறகு உங்கள் நிலையை என்னிடம் வந்து சொல்லுங்கள்' என்று அனுப்பி வைத்தார்.

ஒருவாரம்கழிந்தது. அந்தப் பத்துப் பேரும் மிகப் பரிதாபமான நிலையில் வந்து துறவியைக் கண்டார்கள். அவரிடம் 'எங்களால் செம்மறியாட்டு நாற்றத்தைத் தாங்க முடியவில்லை. இன்னும் இரண்டு நாட்கள் அதனுடன் தங்கினால் நாங்கள் இறந்தே போய்விடுவோம்' என்றுபுலம்பினார்கள். அதற்குத் துறவி 'அப்படியானால்அந்தச் செம்மறி ஆட்டை உங்கள் அறையிலிருந்து துரத்தி விடுங்கள். ஒருவாரம் கழித்து வந்து என்னைப் பாருங்கள்' என்றார்

திரும்பவும் ஒருவாரம் கழிந்த பின்னர்பத்துப்பேரும் துறவியைக் கண்டனர். அவரிடம் 'துறவியாரே! நாங்கள் அந்தஅறைக்குள்இப்பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். செம்மறியாடும் இல்லை. புழுக்கைநாற்றமும் இல்லை. இப்பொழுது அந்த அறை சொர்க்கமாகவுள்ளது. உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை' என்றுசொல்லிவிடை பெற்றார்கள்.

பேராசிரியர் எ. சோதி.

# தியாகிகள் தினத்தில் பரவலாக சமூகப் பணிகள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் தியாகிகள் தினம் நேற்று முன்தினம் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் அனுஷ்டிக்கப்பட்டது

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ். பிராந்திய அலுவலகம், நெல்லியடி, அச்சுவேலி, சுன்னாகம், நவாலி, பண்டத்தரிப்பு, மானிப்பாய் ஆகிய கிளை அலுவலகங்களில் தியாகிகள் தினம் உணர்ச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி, 50 இற்கும் மேற்பட்ட ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் யாழ். போதனாவைத்தியசாலையில் இரத்ததானம் செய்தனர்.

அத்துடன், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் 200 சிறார்களுக்கு மதியபோசனம் மற்றும் பாடசாலை உபகரணங்கள் மற்றும்,

மூளாய் வயோதிபர் இல்லத்தைச் சேர்ந்தவர்களுக்கு மதிய உணவு, இல்லத்திற்கு வேண்டிய தளபாடங்கள்,

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான தாயகம் இல்லம், பரமானந்த ஆச்சிரமம், மெதடிஸ்த இல்லம், திருமறைக் கலாமன்றம், சாயி இல்லம், அன்னை திரேசா இல்லம் ஆகியவற்றிற்கும் உதவு பொருட்கள் உணவுப் பொதிகள் என்பன வழங்கப்பட்டன. (உ-10,6)

# சூதாட்ட விடுதியில் குண்டுத் தாக்குதல்

## நால்வர் பலி; 17 பேர் காயம்

[அனுராதபுரம்]

பௌத்த பிக்குகளினால் சட்டவிரோதமானமுறையில் நடத்தப்பட்டுவந்த ஆடம்பர சூதாட்ட விடுதிஒன்றின்மீது இனந்தெரியாதோர் நேற்று முன்னதிம் நடத்தியகுண்டுத் தாக்குதலினால் சூதாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த நால்வர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளனர். 17பேர்படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இச்சம்பவம் அனுராதபுரம் ஹெப்பிட்டிப் பொலாவை எனும்இடத்தில் நிகழ்ந்துள்ளது இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களில் பதினாறு பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலைவட்டாரங்கள்தெரிவிக்கின்றன.

மேலும் இது தொடர்பாக ஹெப்பிட்டிப் பொலாவைப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். [இ]

# ஆங்கிலதினப் போட்டி இன்று

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கிலதினப் போட்டி நிகழ்வுகள்இன்றும்25 ஆம் திகதியும் காலை9 00மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெறவுள்ளதாக கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளர் இ. சிவஞானசுந்தரம் தெரிவித்தார். (ந-29)

# நாகபூஷணி அம்மன் மஹோற்சவம் இன்று

(அரியாலை)

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் கைலைக்காட்சியும் இரவு சப்பறத் திருவிழாவும்நடைபெறும். 4 ஆம் திகதி காலை10. 00 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

யாத்திரிகர்களின் நலன் கருதி வழமைபோல் இம்முறையும் மோட்டார்படகு சேவையினர், அமுதசுரபி அன்னதான சபையினர், தொண்டர்சபை, சாரணர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினர் தாகசாந்தி நிலையத்தினர் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

விசேட தினங்களில் யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் சாலைகளுக்கிடையில் விசேட பஸ்சேவைகள் நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-106)

# வி.அ.அ. படிவங்கள் போதியளவு கையிருப்பில்

(யாழ்ப்பாணம்)

விசேட அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் குறிப்பிடப்பட்டளவு கையிருப்பில் உள்ளதாகவும், விண்ணப்பதாரிகளுக்கு ஏற்ப அதனை விநியோகிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவகர்களுக்கு விநியோகிக்கப்படும் படிவங்களை விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ளலாம் என விசேட அடையாள அட்டைப் பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும், விசேட அடையாள அட்டை தொலைந்தவர்களும் உடன் விசேட அடையாள அட்டை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

விசேட அடையாளஅட்டையை தொலைத்தவர்கள் பொலிஸ் அறிக்கையினையும் இரண்டு புகைப்படங்களையும் கிராம அலுவலர் மூலம் பிரதேச செயலகங்கள் ஊடாக இராணுவப்பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைத்தால் கூடிய விரைவில் அடையாள அட்டை பெறமுடியும் எனவும்,

பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிப்பதால் குறைந்தது2 வாரங்களில் மாணவர்கள் விசேட அடையாள அட்டை பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டது. (உ-10)

# யூலை3வரை விளக்கமறியல்

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ்கைதாகி யாழ்சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள யுவதிஒருவர் உட்பட்ட இருவர் நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாகயாழ்நீதிமன்றில் மேலதிக நீதவான் சு.பா. சுப்பிரமணியம் முன்னிலையில்ஆஜர்படுத்தப்பட்டனர்.

முல்லைத்தீவு கடற்பகுதியில் வைத்து அண்மையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 6ம்வட்டாரம் வேலணையைசேர்ந்த தணிகாசலம் தவச்செல்வி, கிளிநொச்சிஆனை விழுந்தானைச் சேர்ந்த சிறிகாந்தா சரத்பாபு ஆகிய இருவருமே நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

சட்டமாஅதிபரின் அறிவுறுத்தலை எதிர்பார்த்து இருவரையும் யூலை3ம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான்உத்தரவிட்டார். [உ,6,10]

# அரசைக்கவிழ்க்கும்முயற்சி மு. காங்கிரஸிடம் இல்லை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைக் கவிழ்க்கும் திரைமறைவு முயற்சி முஸ்லிம் காங்கிரஸிடம் இல்லை என அக்கட்சியின் அமைப்பாளர் பைஸ் முஸ்தபா கூறியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள்ளே உருவாகியுள்ள தலைமைத்துவ நெருக்கடியை முடிவிற்கு கொண்டுவர முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இருசாராருக்குமிடையே விரிசல்கள் அதிகரித்துள்ளபோதிலும், சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் பிணக்கை முடிவிற்கு கொண்டுவர முடியுமென்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பில் கடந்த வெள்ளி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம், காத்தான் குடியில் இடம் பெற்ற ஹர்த்தால் ஆகியவற்றால் கட்சித்தலைவர் ரவூப் ஹக்கிம்கடும்அதிருப்தியடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# ரணில், ஹக்கீம் சந்திப்பு ஆதரவுவழங்குவதாகஉறுதி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் சந்தித்து பேசியுள்ளார்.

இப் பேச்சு வார்த்தையையடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு அளிப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் உறுதியளித்ததாக ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, அமைச்சர் ரவூப் ஹக்கீம் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆணைக்குழுக்கள் அமைப்பது தொடர்பாகவும் பேசியுள்ளார். (வ)

# கூட்டம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை நகர முதல்வர் சட்டத்தரணி நடராஜா ரவிராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

அண்மையில், வேலை நிறுத்தம் செய்திருந்த சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரியவருகின்றது. (உ-77)

# நுணாவில் சந்தி வரை பேருந்துச் சேவை

(கல்வயல்)

பருத்தித் துறையிலிருந்து மட்டுவில் கனகம் புளியடிச் சந்திவரை இடம்பெற்றுவந்த 765 ஆம் இலக்க பேருந்து சேவை இன்று முதல் நுணாவில் சந்தி வரை இடம் பெறவுள்ளது.

இடம் பெயர்ந்து வடமராட்சியில் வசிக்கும் மக்கள் நுணாவிலில் அமைந்துள்ள சிவில் நிர்வாகக் காரியாலயத்திற்குச் செல்வதற்கு வசதியாகவே இச் சேவைத் தூரம் நீடித்துள்ளது. (உ-111)

# சரசாலையில் பலத்தசேதம்

(கல்வயல்)

தென்மராட்சியில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கை காரணமாக சரசாலை மட்டுவில் பகுதிகளில் பலத்தசேதம் ஏற்பட்டிருக்கிறது.

அப்பகுதிப் பாடசாலைகள், சனசமூக நிலையக்கட்டடங்கள், பனந்தீனித் தொழிற்சாலை என்பன உருக்குலைந்த நிலையில் காணப்படுகிறது. (உ-111)

# சுயதொழில் மேற்கொள்ள சுழற்சி முறைக்கடன்

(ஊர்காவற்றுறை)

வடக்கு- கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாரந்தனை மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சிறு அபிவிருத்தி வேலைகளுக்காக 60 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

நாரந்தனை மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு கிடைத்த மேற்படி 60 ஆயிரம்ரூபாவும் சுய தொழிலை மேற்கொள்வோருக்கு கடனாக வழங்கப்படவுள்ளதாக சங்கத்தின் பொருளாளர் கோ. ஜெகதீஸ்குமார் தெரிவித்தார்.

கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் சங்க அங்கத்தவர்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்காக சுழற்சி முறையில் கடன் வழங்கப்படுவதுடன் முதற்கட்டமாக 10 பேருக்கு வழங்கப்படுமெனவும்அவர் மேலும் தெரிவித்தார். (உ-75)

# வீதிதிருத்தம் இல்லை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நீதிமன்றம், அரச உணவுக்களஞ்சியம் என்பவற்றுக்குச்செல்லும் வீதி இது வரை புனரமைக்கப்படாமல் உள்ளது.

இதனால் உணவுக்களஞ்சியத்திற்குப் பொருட்களினை ஏற்ற வரும் வாகன சாரதிகள், மற்றும் நீதிமன்றத்திற்குச் செல்வோர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். (உ-75)

# தமிழ்-சிங்கள மொழிகளில் தேர்ச்சி உள்ளவர்களுக்கு மட்டுமே அரச உத்தியோகம்

(கொழும்பு)

சிங்களத்திலும் தமிழிலும் தேர்ச்சி இருந்தால் மட்டுமே அரசாங்க உத்தியோகத்தில் நியமனம் செய்யப்படுவர் என இன அலுவல்கள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் கனிப்பொருள்வள அபிவிருத்தி அமைச்சர் அத்தாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டில் அரச உத்தியோகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்கள் தமிழ்-சிங்கள மொழிகளில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பது கட்டாயமாக்கப்படவுள்ளது. (செ)

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ பவுடர் பூசவும் பணம் கட்ட வேண்டும்

அதிகளவு வரி விதித்து மக்களை சுரண்டிக் கொள்வதில் எமது நாட்டை விட விஞ்சியவர்களும் இருந்திருக்கிறார்கள் எனக் கேள்விப்படும் போது ஆச்சரியமாக இருக்கிறதா?

இங்கிலாந்தில் 18 ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த ''சர்வில்லியம் பிட்'' என்ற மன்னன் வரி விதிப்பதில் அவனுக்கு நிகர் அவன்தானாம். மூகத்தில் பவுடர் பூசிக் கொள்வதற்குக் கூட வரி அறவிட்டான் என்றால் பாருங்களேன்...

### ★ பிள்ளைகளின் உரிமை பெற்றோருக்கு இல்லை

எமது நாட்டைப் போல பிறந்த குழந்தைகளுக்கு நாம் விரும்பியவாறெல்லாம் பெயர் வைக்கும் உரிமை பிரான்சிலும், ஜேர்மனியிலும் அறவே இல்லை.

அவ்விரு நாடுகளிலும் பிறக்கும் குழந்தைகளுக்கு பெற்றோர் தாங்கள் விரும்பிய பெயரை எல்லாம் சூட்ட முடியாது! அரசாங்கம் வெளியிடும் பெயர்ப் பட்டியலில் உள்ள ஒரு பெயரைத்தான் பெற்றோர் வைக்க வேண்டுமாம். அந் நாடுகளில் தாய், தந்தையின் பொறுப்பு குழந்தைகளைப் பெறுவதுதான் மீதெல்லாவற்றையும் அரசே கவனிக்குமாம்.

-அவதானி-

## இந்தியப் படை சுட்டு பங்களாதேஷ் பிரஜை பலி

(புதுடில்லி)

இந்தியப் படைவீரர் மேலும் ஒரு பங்களாதேஷின் அப்பாவிப் பிரஜையை சுட்டுக் கொன்றுள்ளனர் என்று அந்நாட்டரசு அறிவித்துள்ளது.

தமது படைகளை தாக்கிய காரணத்தினால் அந்த பங்களாதேஷ் பிரஜையை தாம் சுட்டதாக இந்திய இராணுவப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## தாய்வானில் புதிய ஏவுகணைப் பரிசோதனை

(தைப்பீ)

சீனாவின் ஏவுகணை அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கும் வகையில் தாய்வான் ஏவுகணைப் பரிசோதனை ஒன்றை நிகழ்த்தி வருகிறது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வெளியிட தாய்வான் இராணுவம் மறுத்துள்ள போதும், ஏவுகணை பரீட்சார்த்த நடவடிக்கை தொடர்பாக விமான நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிவித்தலின் படி நேற்று 10 மணியளவில் ஆரம்பித்த இப்பரிசோதனை நாளை வரை இடம் பெறும் என தாய்வானின் அரச தகவல் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (உ-7)

## சேர்பியாவில் மனிதப் புதைகுழி கண்டுபிடிப்பு

(பெல்கிரேட்)

கிழக்கு சேர்பியாவில் சேர்பிய பாதுகாப்புப் படையினர் பயன்படுத்திய முகாம் அருகில் பாரியமனிதப் புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகச்செய்தி வெளியாகியுள்ளன.

மேற்படி புதை குழியில் 30 இற்கும் அதிகமான சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், கொசோவோ யுத்தம் இடம் பெற்ற காலத்தில் கொல்லப்பட்ட பல முஸ்லிம்களின் சடலங்களே இங்கு புதைக்கப்பட்டிருந்ததாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது போன்ற வேறு பல புதை குழிகளும் இப்பகுதியில் இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

## இந்தியா மீதான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டாம்

(வாஷிங்டன்)

இந்தியாவுடனான பொருளாதாரத் தடையை நீக்க வேண்டாமென்றும் இரு நாடுகளையும் ஒரே வகையாக நோக்க வேண்டுமென்றும் பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவைக் கேட்டுள்ளார்.

ஆயுதப் பரிகரணம் தொடர்பான மாநாடு ஒன்றில் உரையாற்றுகையிலேயே பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் அப்துல் ஷட்டார் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அணுவாயுதப் பரிசோதனையைத் தடை செய்யும் ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதை பாகிஸ்தான் எதிர்பார்க்கிறது என்று தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தான் இந்தியா ஆகிய இருநாடுகளும் அணு ஆயுதம் தயாரிப்பதில் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவதை அடுத்து இருநாட்டின் மீதும் பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்த போதும் அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யுபுஷ் இத்தடையை நீக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. (உ-7

# அல்ஜீரிய அரசாங்கத்திற்கெதிராக பரவலாக ஆர்ப்பாட்டங்கள்

## கட்டடங்கள் தீவைப்பு, 52பேர் பலி

(அல்ஜீரியாஸ்)

அல்ஜீரியாவின் பல பகுதிகளிலும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுவதால் அதிகளவான அரச உடமைகள் மற்றும் கட்டடங்கள், கடைகள் என்பன தீவைத்து கொழுத்தப்பட்டுள்ளன.

ஏப்ரல் 18 ஆம்திகதி பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்தவாலிபனொருவன் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே மேற்படி ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது அல்ஜீரிய தலை நகரில் உள்ள தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம், அரசரயர் கூட்டுத் தாபனம் மற்றும் பொலிஸார் தங்கியிருந்த 6 மாடிக்கட்டடம் உட்பட பலஅரச உடமைகள் ஆர்ப்பாட்டக் காரர்களால் தீவைத்து அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நகரின் ஆளுநர் மாளிகையை சேதமாக்க விரைந்த ஆர்ப்பாட்டக்காரர் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 52 பேர் வரையில் பலியாகியுள்ளதாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

அல்ஜீரியாவில் புதிதாக தோன்றியுள்ள இவ் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக ஜனாதிபதி அப்டெலஸிஸ் பௌட்டெலிகாவின் ஆட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## கொட்டும் மழையால் குஜராத்தில் 20 பேர் பலி

(அஹமதாபாத்)

கடந்த 10 நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழையின் காரணமாக குஜராத் மாநிலத்தில் 20 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தொடர்ச்சியான மழை மற்றும் புயலால் அப் பகுதியில் உள்ள கட்டடங்கள் உடைந்து பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியில் உள்ள அணைக் கட்டுகள் உடைக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாக சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். (உ-9)

## மூவர் பலி

(மொஸ்கோ)

செச்சினியாவில் இடம் பெற்ற இரு வேறு சம்பவங்களில் 3 செச்சினியக் கெரில்லாக்கள் பலியாகியுள்ளனர்.

ரஷ்ய இராணுவத்தினருக்கெதிராக வைத்த நிலக் கண்ணி தவறுதலாக வெடித்ததில் இரு கெரில்லாக்களும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயன்ற போது ஒரு கெரில்லாவும் கொல்லப்பட்டனர். (உ-9)

உலக தரிசனம்

## மணிப்பூரில் அமுல்படுத்தப்பட்ட கடும் சட்டதிட்டங்களால் கலகக்காரர் தம் முயற்சிகளைக் கைவிட்டனர்

### அமைதி நிலவுவதாக அரசு அறிவிப்பு

(மணிப்பூர்)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் காலவரையறையற்று அமுல்படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டத்தை அடுத்து அப் பகுதியில் அமைதி நிலவுவதாக அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

ஊரடங்கை மீறுபவர்கள் எவரையும் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லும்படி போடப்பட்ட கடுமையான உத்தரவை அடுத்து அப் பகுதியில் தொடர்ந்த ஆர்ப்பாட்டங்கள் அடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் நடைபெற்ற மோதல்களில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக உயர்ந்துள்ளன

இதேவேளை, நாக கிளர்ச்சிக்காரர்களுடன் ஏற்பட்டுள்ள புதிய இணக்கம் புதிய தோர் அகன்ற நாகலாந்தை உருவாக்கவழி செய்துவிடுமோ என்று மணிப்பூர் மக்கள் அஞ்சுவது அவசியமற்றது என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார். [உ-9]

## பெருமழை தொடர்கிறது

(ரொறன்ரோ)

கனடாவின் ரொறன்ரோ நகரப்பகுதியில் தொடரும் மழை மற்றும் சூறாவளியால் மேலும் மூவர் பலியாகியுள்ளனர் (உ-7)

## சட்ட விரோதிகள் தொடர்பான அவுஸ்திரேலிய அரசின் கொள்கையில் மாற்றமில்லை

(கன்பரா)

அவுஸ்திரேலியாவில் சட்ட விரோதமாக நுழையும் குடியேறிகள் மற்றும் அரசியல் தஞ்சம் கோருவோர் அனைவரையும் தடுத்து வைக்கும் அந்நாட்டின் கொள்கையை மறு பரிசீலனை செய்யவேண்டும் எனபாராளுமன்ற மனித உரிமைகள் குழு கூறியதை அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவர்ட் நிராகரித்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலிய தடுப்பு முகாம்களில் உள்ள நிலைமைகுறித்து தாங்கள் அதிர்ச்சி அடைந்துள்ளதாக பாராளுமன்ற மனித உரிமைக்குழு கூறியுள்ளது.

இம்முகாம்களில் மக்கள் சுகாதார மற்ற முறையில்பல மாதகாலங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பது மனித உரிமைகளை மீறும் செயல் என மேலும்குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (உ-9)

## பாகிஸ்தான் தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றமில்லை என வாஜ்பாய் உறுதிபடத் தெரிவிப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் தொடர்பாக இந்தியாவின் கருத்தில் எவ்வித மாற்றமும் இருக்காது என இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உறுதி படத் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் இந்தியாவில் இருந்து பிரிக்க முடியாத ஒரு பகுதி எனவும் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் இந்தியாவின் இந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படாது எனவும் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.



இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் காஷ்மீர் தொடர்பாக உயர்மட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில் பிரதமரின் மேற்படி அறிவிப்பு சமரசத்தை குழப்பி விடக்கூடும் என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ-9)

இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால் தான்கண் டனைத்(து) இவ்வுலகு

குறள்

## வலம்புரி

### பிரதமரின் விசித்திரக் கோரிக்கை

இராணுவத்தில் சேருவதற்கும், பௌத்த மதத்தைப் பாதுகாப்பதற்குமாக சிங்கள மக்கள் அதிக பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென பிரதமர் ரட்ணிசிறி விக்கிரம நாயக்கா சிங்களப் பெற்றோரிடம் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் யுத்தத்தால் எத்தனையோ மனிதஉயிர்கள் மடிந்துகொண்டிருக்கின்றன. வாழவேண்டியவர், நிம்மதியாக வாழ முடியாதிருக்கும் போது அந்த உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய பிரதமரின் கோரிக்கை அதிசயமானது மட்டுமல்ல, அதிர்ச்சியானதுமே.

சிங்கள - தமிழ் இனப் பேதமை காரணமாக இளைஞர்கள் பல்லாயிரக் கணக்கில் அழிந்து விட்டனர். இந்த நாட்டின் உழைப்பாளர் படை அழிந்து தங்கிவாழும் முதியோர் மட்டுமே மிஞ்சும் அபாயம் ஏற்பட்டிருக்கும் போது குழந்தைகளை அதிகம் பெற்றெடுக்க வேண்டுமென்ற பிரதமரின்கருத்து சுகபோகம் அனுபவிக்கும் ஆட்சியாளர்களின் வழமையான வேதம் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இலங்கை போன்றவளர்முக நாடுகள் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தியடைய வேண்டுமாயின், சனத்தொகைப் பெருக்கம் குறைவடைய வேண்டும். வறிய நாடுகளிலுள்ள ஒரு பொதுவான பிரச்சினை சனத்தொகை அதிகரிப்பாகும். இதனால் சர்வதேச பொது அமைப்புகள் வறிய நாடுகள் தமது சனத்தொகையைக் கட்டுப்படுத்த வேண்டுமென அறிவுரை கூறியுள்ளன.

இந்நிலையில் இலங்கையின் சுகாதார அமைச்சு தேசிய ரீதியில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது.

இச்சந்தர்ப்பத்தில் பிரதமரின்வேண்டுகோள் நாட்டைமேலும் பாதிப்படையச் செய்யும் என்பதுடன் சுகாதார அமைச்சின்செயற்பாட்டிற்கு குந்தகமாகவும் அமைந்துள்ளது

இனப்பாகுபாட்டிலிருந்து அரசுஇன்னமும்விலகவில்லை என்பதைஉணர்த்துகின்ற பிரதமரின் ஒருபக்க வேண்டுகோள் இலங்கை இப்போது சிங்கள நாடு-தமிழ் நாடு என இரண்டாகப் பிரிந்து விட்டதைஉணர்த்துவது போலும் உள்ளது.

# தீர்க்காயுளும், ஆரோக்கியமும் பெற்று வாழ

# தினமும் பிராணாயாமம் செய்வது நலமாகும்

**உருவில் சக்தி தியாகராசா**

(நேற்றைய தொடர்ச்சி)

### நாடி சுத்தி

நாம் பத்மாசனத்திலோ, அல்லது சித்தாசனத்திலோ உட்கார்ந்து கொள்ள வேண்டும். ஆனால் முதுகு, கழுத்து வளையாமல் நிமிர்ந்திருக்க வேண்டும். சற்று நேரம் சாதாரண மூச்சு விடவும். பின்பு வலது கைப் பெரு விரலால் வலது நாசியை அழுத்தி மூடி இடது நாசியால் மூச்சை மெதுவாய் முடிந்த வரை இழுத்து நுரையீரல்களைநிரப்பவும் அப்பொழுது இடதுகை இடது தொடையின் மேல் இருத்தல் வேண்டும் பின்பு வலது கை மோதிர விரலால், பெருவிரலுக்கு அடுத்த ஆட்காட்டி விரல் நடுவிரலைமடக்கிக்கொண்டு இடது நாசியை இலேசாக அழுத்தி மூடவும் உடனே வலது நாசியின் மேல் இருக்கும் கட்டை விரலை இலேசாக அகற்றி மூச்சைவெளியே இரண்டு பங்கு விடவும். காற்றை மெதுவாக விட வேண்டும். இப்படி ஒரு தடவை மூச்சை இழுத்து விட்டால் ஒரு நாடி சுத்தி கணக்காகும். இவ்வண்ணம் தொடர்ந்து இடது நாசி வழியாக மூச்சை உள்ளுக்கிழுத்து, வலது நாசியின் வழியாய் வெளியே விட்டு மறுபடியும் வலது நாசி வழியாக மூச்சை இழுத்து இடது நாசியின் வழியாய்விட்டு விடவும். நேரத்திற்கு ஏற்ப இந்த நாடி சுத்தியை தினமும் காலை, மாலை செய்து வாருங்கள். மூச்சை உள்ளே இழுப்பது பூரகம் என்றும் வெளியே விடுவதை ரேசகம் என்றும் சொல்வார்கள். மூச்சை உள் இழுப்பதிலும் வெளியில் விடுவதிலும் ஒரு நியதியைக் கடைப் பிடிக்க வேண்டும். ஒழுங்கு முறையில் தான் பலன் உண்டு சிலர் மூச்சை உள்ளிழுக்கும் போது அதிக நேரம் எடுத்துக் கொள்வார்கள். ஆனால்வெளியே விடும் போதுகுறைந்த நேரத்தை எடுக்கின்றார்கள். இது தவறான முறையாகும். மூச்சை இழுக்கும் பொழுது 7 எண்ணும் வரை எடுத்துக் கொண்டும் வெளியே மூச்சை விடும் போது 14 எண்ணிக்கை வரை எடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது உள் இழுப்பது ஒரு மடங்கு வெளி விடுவது இரண்டு மடங்கு நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மூச்சை உள்ளே இழுக்கும் போது சாந்தம், சுகம், ஆனந்தம், ஆரோக்கியம், அமரத்துவம் உள்ளே நிரம்பி சரீரம் முழுவதும் பரவுவதாக எண்ணிக் கொள்ள வேண்டும். அதேபோல மூச்சை வெளியே விடும் போதும் நம்மிடம் இருக்கும் துன்பம், கஷ்டம், பிணி, அனைத்தும் மூச்சுடன் கலந்து வெளியேறி விடுவதாகவும் நினைத்துக் கொள்ளுதல் வேண்டும். இந்தப் பாவனை நல்ல பலன்களைத் தரும்.

### ஆசனப் பயிற்சியின் பின்

ஆரம்பத்தில் காலையில் செய்து பழகவும். நாளடைவில் மாலை மதியம் செய்யவும். குறைந்தது 10 நாடி சுத்தியாவது ஆரம்பத்தில் செய்து வாருங்கள். ஆசனப் பயிற்சி செய்பவர்கள் அப்பயிற்சியை முடித்துக் கொண்டு இதனைச் செய்யலாம். இப்பயிற்சியால் தினமும் சிறு சிறு பலன் கிடைத்தாலும் நாளடைவில் பெரும் பலனை அனுபவிப்பீர்கள். வயிற்றில் உணவு இருக்கும் போது நாடிசுத்தி செய்தல் கூடாது வெறு வயிற்றில் தான் செய்தல் வேண்டும். உணவு உண்டு 3 மணித்தியாலயத்தின் பின்பு நாடி சுத்தி பழகிக் கொள்ளலாம். நாடிசுத்தி செய்து விட்டு உடன் எழும்பக் கூடாது. அதனைத் தொடர்ந்து சற்று நேரம் தியானம் இருத்தல் வேண்டும். நாடிசுத்தி செய்வதற்கு அமைதியான இடத்தைத் தேர்ந்தெடுங்கள் அதற்காகக் கதவுகளையும்யன்னல்களையும் மூடி விட்டுச் செய்யாதீர்கள். கதவு யன்னல்களைத் திறந்து நல்ல காற்றோட்டமாக இருக்க வேண்டும். இதனால் மனம் ஒரு நிலைப்படும் நல்ல காற்றையும் சுவாசிக்கலாம். நல்ல வாசமான ஊதுபத்தியை கொழுத்தி வையுங்கள். உங்கள் கண்களில் குத்துவிளக்கின் ஒளியோ, யோகிகளின் படமோ பட்டுக் கொண்டிருந்தால் எளிதில் தியானமும் கைகூடும் பத்மாசனத்திலே நாடிசுத்தி செய்வதை நாளடைவில் பழக்கத்துக்கு கொண்டு வாருங்கள். சுவாசத்தின் நடமாட்டம் தண்டுவடத்தின் ஊடே செல்லும் நரம்புகளிலும் உண்டு. எனவேமுதுகு கூனாமல் இருக்கப் பழகிக் கொள்ளுதல் வேண்டும். எமக்கு பிராண சக்தியைப் பெறுவதற்காகத் தான் நாடிசுத்தியைச் செய்து வரல் வேண்டும்.

### இருதய நோய்கள் நீங்கும்

நாம் ஒழுங்குமுறையில்லாமல் அவசரஅவசரமாகச் சுவாசத்தை விட்டுக் கொண்டிருந்தால், அதனால் சரியான பிராணவாயுவை உட்கொள்ளாமலும் கரிய மலவாயுவை வெளியில் விடாமலும் இருந்தால் நம் இரத்தம் சுத்தம் அடைவது ஏது இந்த அசுத்த இரத்தம் மீண்டும் மீண்டும் இருதயத்திற்குச் சென்று உடல் முழுவதும் சென்று கொண்டே இருப்பதனால் தான் சோர்வு, நரம்புப் பலவீனம், தலைவலி, மயக்கம் என்ற பலவித கோளாறுகள் தோன்றும். இவற்றின் தன்மையால் இருதய நோய்வருவதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. எனவே நாடிசுத்தி செய்வதினால் வேண்டிய அளவு பிராணவாயுவைப்பெற்றுக்கொள்வதினால் இருதய நோய் ஏற்படமாட்டாது. நாடி சுத்திப் பயிற்சியினால் தத்தளித்தோடும் மனம் நிதானம் பெற்று அடங்கும். கோப உணர்வுகள் நீங்கி அமைதி ஏற்படும். வில்பவர் பலம் பெறும் துள்ளித் துடிக்கும் நாடி ஒழுங்குமுறை அமைதியுடன் செல்லும். சாந்திகுடிகொள்ளும். ஆரோக்கியம் ஏற்படும். ஆசனங்களுடன் நாடி சுத்தி செய்வதனால் பலவித இருதய நோய்கள் விரட்டி அடிக்கப்படுகின்றன. நாடிசுத்தி பழகுபவர்களுக்கு அடிக்கடிசளி, இருமல் வரமாட்டாது. அவர்களது சுவாசக்குழல், நுரையீரல் எப்பொழுதும் சுத்தமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும். பலமான குறட்டை விடுபவர்களும் வாயினால் சுவாசிப்பவர்களும் நாடி சுத்தியால் மேற்படி கோளாறுகளை நீக்கலாம். எமது மூச்சுக்கள் சாத்வீகத்தில் சிறிதாகவும் துர்மார்க்கத்தில் அதிகமாகவும் செலவாகின்றது. இதனால் சீக்கிரம் மரணம் எம்மைத் தழுவிக்கொள்கின்றது. நாடிசுத்தி செய்யாமல் சாதாரணமாய் இருப்பவனுக்கு சக்தி அதிகமாக செலவானதுமல்லாமல் இழந்த சக்தியைப் பெறமுயற்சிக்காமல் நோய்கள்பெருகி துன்பங்களுக்கு ஆளாகிறான். பிராணாயாமத்தில் வழக்கப்படி முதலில் பூரகம் பிறகு கும்பகம் அதன் பிறகு ரேசகம் செய்ய வேண்டும். கும்பகம் என்பது மூச்சை உள்ளே அடக்கி வைப்பதாகும். பிராணாயாமப் பயிற்சியின்போது மூச்சை உள்ளே இழுக்கும் ஒரு பங்கு. அம்மூச்சை அடக்கி வைக்கும் கும்பநிலை நான்கு பங்கு மூச்சை வெளியே விடுதல் இரண்டு பங்காக அமைதல் வேண்டும். இந்த ஒழுங்கு முறையில் பிராணாயாமப் பயிற்சியைச் செய்தல் வேண்டும். பிராணாயாமத்தினால் ரஜோ குணமும், தாமதகுணமும் குறைவடைவதினால் சித்தத்தில் தெளிவு ஏற்படும் ஸ்த்துவம் விருத்தி அடையும் இதனால் உள்ளமும் உடலும் பண்படுகின்றன.

### இரண்டாவது நிலை

வலது நாசியை வலது பெருவிரலால் அழுத்தி அமைத்து, இடது நாசிவழியாக மூச்சை இழுக்கவும். எவ்வளவு காற்று உட்கொள்ள முடியுமோ அவ்வளவு உட்கொண்ட பிறகு வலது மோதிர விரலால் அடைத்து, மூச்சை உள்ளே நிறுத்தி பிறகு வலது பெருவிரலை வலது நாசியிலிருந்து விலக்கி மிகமெதுவாக மூச்சை வெளிவிடவும். இது ஒரு பிராணாயாமம் ஆகும். பிறகு இடது நாசியை வலது மோதிர விரலால் அடைத்து வலது நாசியினால் மூச்சை வேண்டு மட்டும் உள்ளே இழுக்கவும். பின்பு வலது நாசியையும் வலது பெருவிரலால்அடைத்து கும்பகம் செய்யவும். அதன் பிறகு வலது மோதிர விரலை நீக்கி இடது நாசியால் மூச்சை மெதுவாக வெளியே விடவும். இது இண்டாவது பிராணாயாமமாகும். இது ஆரம்பத்தில் 3 எண்ணிக்கையில் ஆரம்பிக்க வேண்டும்; நாளடைவில் 20 எண்ணிக்கை கூடச் செய்யலாம். நல்ல பலன் கிடைக்கும். ஆரம்பத்தில் ஒருவேளை தொடங்கி நாளடைவில் காலை, மாலை, பிற்பகல், நடுநிசி என நான்கு காலங்களிலும் செய்யலாம். ஆகாரம் உட்கொண்டு மூன்று அல்லது நான்கு மணித்தியாலம் கழித்து கும்பக பிராணாயாமம் செய்யலாம். ஆரம்ப பயிற்சியாளருக்கு உடலில் உஷ்ணம் ஏற்படலாம். எனவே இரவில் பால் சாப்பிட்டால் நல்லது: விருப்பம்உடையவர்கள் மந்திரங்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### நற்பலன் கிடைக்கும்

நல்லசிந்தனைகள் விளைந்தால்தான் அரிய செயல்கள் கிடைக்கும். எந்தச்செயல்கள் விருத்தியும், வெற்றியும் அடைவதற்கு உயர்ந்த சிந்தனைகள் அமையவேண்டும். பிராணாயாமத்தில் மூச்சைக் கட்டுப்படுத்தி விடுவதால் மனதின் சக்தியை ஒருமுனைப் படுத்தி பல அற்புதங்களை நிகழ்த்த முடிகிறது. பிராணாயாமத்தில் கும்பக நிலையில் மூச்சை நாவின் நுனி, கண்டம், இருதயம், வயிற்றின் மேற்பகுதி ஆகியபகுதிகளில் நிறுத்திப்பழகலாம். இப்பயிற்சியினால் நரம்புகள், நரம்புக் கோசங்கள், சக்கரங்கள் வீரியமும் விளிப்பும் பெற்று, நோய்களைத்தடுக்கும் சக்தி அதிகரிக்கின்றது. பிராணாயாமசாதகர் இருக்கும் இடமெல்லாம் ஆரோக்கிய ஒளி வீசி சுற்றி இருப்பவர்களுக்கும் நல்லபலன்கள் கிடைக்கின்றது. நெஞ்சு நோ ஏற்படாது. சுக்கிலம்கெட்டிபடும். மலட்டுத்தன்மை விலகும். கல்வியும் கற்பனையும் சிறந்து வளரும். இச்சா சக்தியின் பலன் கிடைக்கின்றது; ஆயுளும் நீடிக்கின்றது. எனவே அன்பு நேயர்களே ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்ற தத்துவம் பேசி காலத்தைக்கடத்தாது பிராணாயாமப் பயிற்சிகளைத் தினமும் செய்து நீண்ட ஆயுளுடனும்நிறைவான ஆரோக்கியத்துடனும் இருங்கள்.

(முற்றும்)

## சாயி அருளமுதம்



கடவுளை மறுப்பவர்கள் தம்மையும், தமது மகத்துவத்தையும் மறுக்கிறார்கள். ஏதோ ஒவ்வொரு விதத்தில், எல்லோருடைய இருதயத்திலும் அன்பு இருக்கிறது. ஏழைகளின் பிள்ளைகளின் மீதோ அல்லதுபிறர் நன்மைக்காகச் செய்யப்படும் கருமங்களிலோ அந்த அன்பு காணப்படலாம். அந்த அன்பு தெய்வமாகும். அதுவே அவர்களினுள்ளேயிருக்கும் தெய்வீகத்தின் ஒளிக்கீற்றாகும். எவ்வளவு அற்பமானதெனினும், தற்காலிகமானதெனினும் அவர்களுக்கு அவ்வப்போது ஆனந்தம் ஏற்படுவதுண்டு. அதுவும் கூட தெய்வத்தினதும், தெய்வீகத்தினதும் ஒளிக்கீற்றாகும். அவர்களுக்குச் சாந்தி, பற்றின்மை, இரக்கம் ஆகியனவும் உண்டு. இவையும் அவர்களுடைய மனக் கண்ணாடியில் தோற்றுகின்ற தெய்வத்தின் பிரதி பிம்பம்தான். இவைகள் யாவும் உள்ளத்தின் மென்மையான குணாதிசயங்கள். நற்கருமங்களினாலேற்படும் அனுகூலங்களைச் சிலாகித்தல் (மெச்சுதல்) மூலம் அவை வெளிக்காட்டப்படுகின்றன.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# சமாதானத்தில் அரசிற்கு அக்கறையில்லை

# பிரிட்டிஷ் தூதுவரிடம் யாழ். ஆயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசு தனதுமுழுமையான ஆற்றலை சமாதானப்பேச்சுவார்த்தையில் காட்டாமல் வேறு விடயங்களிலேயே காட்டிவருவதாக யாழ்மாவட்ட ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் தம்மைசந்தித்த பிரிட்டிஸ் தூதுவர் லிண்டாடபீல்ட்டிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்திருந்த பிரிட்டிஷ் தூதுவர் லிண்டாபீல்ட் நேற்றுபிற்பகல் யாழ். ஆயர் அதிவண தே மஸ்சவுந்தர நாயகத்தை ஆயர் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்

இச்சந்திப்பின் போது யாழ் ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்:

அரசும்விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்தம் செய்துசமாதானப்பேச்சு வார்த்தையில்ஈடுபட்டுஇனப்பிரச்சினைக்கு முடிவுகட்டவேண்டும்என்பதையே விரும்புகிறார்கள் என்று யாழ் ஆயர் பிரிட்டிஸ் தூதுவரிடம் எடுத்துக் கூறினார்.

இதனையடுத்து யாழ்மக்களது இன்றையநிலை குறித்து பிரிட்டிஷ் தூதுவர் யாழ்ஆயரிடம் கருத்துத்தெரிவிக்கையில் தான் கடந்தமுறை யாழ்வந்தபோது குடாநாட்டு மக்களின் முகங்களில் மகிழ்ச்சி காணப்பட்டது. ஆனால் இன்று அவர்களைப்பார்க்கும்போது அவர்கள் முகங்களில் கவலை தென்படுவதாகதெரிவித்தார். [வ]

## சர்வமதக்குழு நயினாதீவுவிஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வந்துள்ள சர்வமதக்குழு நேற்று நயினாதீவு நாகபூசணி அம்மன்கோவில், நாகவிகாரை ஆகியவற்றுக்குச் சென்றுவழிபட்டனர்.

இதே வேளை வண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வரபெருமாள் கோவில், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றுக்கும் சமாதானக் குழு சென்று வழிபாடுநடத்தியது.

இதேவேளை சர்வமதக்குழுவினர் இன்று கொழும்பு திரும்புகின்றனர் (வ)

## பிந்துனுவெவ படுகொலை ரயல்அட்பார் விசாரணை

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைகள் தொடர்பாக ரயல் அட்பார் முறையில்விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார்.

இப்படுகொலைகள்தொடர்பாக சந்தேகநபர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்வதற்கு தேவையான சகல ஆவணங்களும் இருப்பதாக சட்டமா அதிபர் கே. ரி கமலசபேசன் கூறியதையடுத்தே மூன்றுநீதிபதிகளைக் கொண்ட விசாரணைக்குழுவை நியமித்துள்ளதாக பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். (ந-5)

## யாத்திரிகர் மண்டபம் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச சபையினால் குறிகாட்டுவானில் அமைக்கப்பட்ட ''தேவா யாத்திரிகர் இளைப்பாறும் மண்டப'' திறப்புவிழா இன்று காலை 11.00 மணிக்கு பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத்தலைவர் ந. மதனராஜா பிரதம விருந்தினராகவும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (இ)

## கண்ணிவெடி விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடிவிழிப்புணர்வு தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று எதிர் வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ் செயலகத்தில் உள்ள கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறை காலை 9 00 தொடக்கம் பி. ப 4 00 மணிவரையும இடம்பெறவுள்ளது எனவும் இதில் இலங்கை முதலுதவிச் சங்கத்தினைச் சேர்ந்த தெல்லிப்பழை மற்றும் வடமராட்சி உறுப்பினர்கள் பங்குபற்றுவார்கள் எனவும் கண்ணிவெடி விழிப்புணர்வுக் குழு தெரிவித்துள்ளது. (உ-10)

## வழக்குகள் நிராகரிப்பு

(கொழும்பு)

சட்டமா அதிபர் கே. கமலசபேசனுக்கு எதிரான அடிப்படை உரிமை மீறல்தொடர்பாக மூன்று வழக்கும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ராவய ஆசிரியர்விக்ரர்ஐவன் உட்பட மூவர் தொடர்ந்த வழக்கேநேற்று நிராகரிக்கப்பட்டது. (வ)

## பாடசாலைக்குள் புகுந்த திருடன் மாணவியின் வளையலைப் பறித்தான்

## மேலைப்புலோலியில் சம்பவம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயத்தில்நேற்றுக் காலை 8.40மணியளவில் இனம் தெரியாத நபர் ஒருவர் பாடசாலையினுள் புகுந்து மாணவர்களை வெளியே கலைத்துவிட்டு மாணவி ஒருவர் அணிந்திருந்த தங்க வளையலைப் பறித்துக்கொண்டுசென்றார்.

இச்சம்பவத்தின் போது குறித்த மாணவிக்கு சையில் காயம் ஏற்பட்டது. (ந- 43)

## இந்திய மீனவர்களை பார்வையிடுவர்

வடபிரதேச இந்துப்பேரவையினர் இன்று யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களைப் பார்வையிட்டு அவர்களது சுகாதார நலனுக்காக அங்கு பிரார்த்தனை நிகழ்வொன்றை நடத்தவுள்ளனர்.

இந்நிகழ்வின் போது பேரவையால் மீனவர்களுக்கு உடுபிடவைகளும் வழங்கப்படவுள்ளது. (இ)

### பொ. ஐ. மு.

தொடர்பாக ஆற வைத்து முடிவெடுக்கும் என்றும், பொதுஜன ஐக்கிய முன்னணி அரசைக கவிழ்க்க வேண்டிய அவசியம் இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சியில் அமர்த்தும் எண்ணம் ஜே. வி. பிககு இல்லையென்றும் அவர் மேலும தெரிவித்துள்ளார். (வ)

## அமைச்சர் டக்ளஸ் யாழ்ப்பாணத்தில்

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுபுனரமைப்பு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

அமைச்சரை பொதுமக்களும் நிறுவனப் பிரதிநிதிகளும் வழமை போல கட்சி அலுவலகத்தில் சந்திக்க முடியுமென ஈ. பி. டி பி. யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது (இ)

### அமைச்சர்

அரசின் இத்தீர்மானத்தை அடுத்து முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு வழங்கிய தனது ஆதரவை விலக்கிச் கொள்வதாக அறிவித்துள்ளது.

இதற்கு அமைவாக கட்சியின்ஏழுஎம்பிக்களும் பாராளுமன்றில் நேற்று எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டனர்.

அரசிலிருந்து வெளியேறியமை தொடர்பாகரவூப்ஹக்கீம்கருத்துத் தெரிவிக்கையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் முற்றுமுழுதாக அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதில்லையென்று தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசில் இருந்து வெளியேறியதை அடுத்து ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு எதிராக கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாத்தீர்மானம்பொதுஜனஐக்கிய முன்னணி அரசை ஆட்டம் காண வைக்குமென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### பிரி. தூதுவர் அமைச்சர்டக்ளஸை சந்திப்பார்

(யாழ்ப்பாணம்)

இருநாள் விஜயத்தைமேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் லிண்டாடபீல்ட் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர்டக்ளஸ் தேவானந்தாவை இன்றுசந்தித்துப்பேசவுள்ளார்.

இச்சந்திப்பின் போதுதூதுவர் லிண்டாடபீல்ட்டுடன் பிரித்தானிய இராஜதந்திரிகளும் கலந்துகொள்வர். (இ)

### ஹிஸ்புல்லா . . .

கீமி அமைச்சர் ஹர்ன் பதவி விலக்கப்பட்டதை அடுத்து முஸ்லிம் காங்கிரஸின் சகல அரச திணைக்கள தலைவர்களும் இராஜினாமா செய்ய வேண்டுமென்று முஸ்லிம்காங்கிரஸ் எடுத்தமுடிவுக்கு அமைவாகவே ஹிஸ்புல்லா தனது தலைவர்பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். (வ)

### பிரதம . . .

பாராளுமன்றத்துக்கே உயர் மேலாண்மை உண்டென்பதை வெளிப்படுத்தியுள்ளது.

பாராளுமன்ற சிறப்புரிமையில் தலையிட எவருக்கும் அனுமதி வழங்கமுடியாது இதனால் உயர்நீதிமன்றத்தின் தடைஉத்தரவை நிராகரிப்பதாக தெரிவித்த சபாநாயகர் பிரதம நீதியரசருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப் பட்டோருக்கு உத்தரவிடுவதாகவும் தெரிவித்தார். (இ)

### திருநெல்வேலி . . .

காயமடைந்த இராணுவச் சிப்பாய் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின்போது கணபதிப்பிள்ளை கனகரட்ணம் என்றபொதுமகனும் காயத்திற்குள்ளாகி யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-8-43

### திருமதி அஷ்ரப்

டன, தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை தேசிய ஐக்கிய முன்னணி அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவு அளிப்பதா? இல்லையா என்பது பற்றி கட்சி முடிவெடுக்கும் எனறும் கூறியுள்ளார்.

இதேவேளை பிரதியமைச்சர்களான நூர்தீன், மசூத், அப்துல்மஜித், அதாவுல்லா ஆகியோரும் தமதுபதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். (வ)

## புலிகள்-ஈ.பி.டி.பி. புரிந்துணர்வுஏற்படின் ஓர் இரவிற்குள் பிரச்சினைக்குத் தீர்வு

### சர்வமதக் குழுவிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

தென்னிலங்கையிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் தங்கி நிற்கும், சர்வமதக்குழுவினர் நேற்று வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ பி. டி பிக்கு அரசியல் பலம் உண்டு விடுதலைப்புலிகளிடம் ஆயுதபலம் உண்டு. எமக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்படுமானால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு இரவில் தீர்வு காணமுடியுமென்று தெரிவித்தார்.

சர்வமதக் குழுவினருடனான சந்திப்பில் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜா, நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)

ராஜா
யாழ்ப்பாணம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிம்ஸ்
சிட்டிசன்
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
விஜயகாந்,
மீனா
நடித்த
சேதுபதி IPS
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30[பு. நே]
(3264)

தங்க நகையுலகில் தமக்கென தனியிடம் பிடித்தவர்கள்
வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. Fax : 2824 (சி-2123)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்சோ ஸ்தாபனத்தாரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.